# வந்தவாசி நகரமன்றக் கூட்டம்
## சாதாரணக் கூட்ட அறிவிப்பு

31.05.2019–ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 2.00 மணிக்கு நடைபெற்ற வந்தவாசி நகரமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

---

**முன்னிலை : ச.பார்த்தசாரதி,பி,ஏ.,**
தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர், வந்தவாசி நகராட்சி.

## பொருட்கள்

குறள் :

கற்க கசடற கற்பவை கற்றப்பின்
நிற்க அதற்கு தக.

040.வந்தவாசி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் மாசில்லா பிளாஸ்டிக் வந்தவாசியில் தூய்மையாக வைத்திடவும், திடக்கழிவு மேலாண்மை திட்ட பயன்பாடுகளை விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் தேவையான துண்டு பிரசுரங்கள்,அரசு அங்கீகாரம் கூட்டுறவு நிறுவனமான நேப்கோபிரிண்டர்ஸ் வேலுார் அச்சகத்தில் அச்சடித்துக்கொள்ளவும் அதற்கானதோராய மதிப்பீடு செலவினம் ரூ.2,40,000/–க்கு மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு–

1.மன்றம் ஒப்புதல் வழங்குதல்.
2.திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் அதன் பயன்பாடுகள் மற்றும் பிளாஸ்டிக் தடைகள் பயன்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திட துண்டு பிரசுரங்கள் மற்றும் நோட்டீஸ் அச்சடித்த வகையில் செலவினம் ரூ.2,35,000/– மேற்கொண்டது மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.0102/2019/எச்1)

041. வந்தவாசி நகராட்சியில் 2019 – 2020 ம் ஆண்டுக்கு அலுவலக உபயோகத்திற்கு தேவையான எழுதுப்பொருட்கள், படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான The Chennai Printing and Stationery Workers, Co-op. Society Ltd.,ல் சப்ளை பெற்றுக்கொள்ளவும், அதற்கான செலவினம் ரூ.10.00 (பத்து இலட்சம்) மன்றத்தில் பொருள் வைக்கவும், மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு–

1.மன்றம் ஒப்புதல் வழங்குதல்.
2.நிர்வாக நலன் கருதி, அலுவலகப் பணிகள் பாதிக்காத வண்ணம் பொருட்கள் சப்ளை செய்ய மன்றம் அனுமதி அளித்தல்.

(ந.க.எண்.1262/2019/எச்1)

042. வந்தவாசி நகராட்சியில் உள்ள 24 வார்டுகளிலும் தெருவிளக்குகள் பராமரிக்கும் பணியாளர்களுக்கு கோடைகாலத்திற்கும், மழைகாலத்திற்கும் தெருவிளக்கு பணியில் உயிர்பாதுப்பு உபகரணங்கள் கீழ்குறிப்பிட்ட பொருட்கள் சென்னை ஜார்ஜ் மைக்கேல்டவுன் நிறுவனத்தில் சப்ளை செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மற்றும் உபகரணங்கள் ரூ.1.00 (ஒரு இலட்சத்திற்கு) செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. Hand Colours கையுரை – 10 எண்ணிக்கை
2. Gum boot – 10 எண்ணிக்கை
3. Rain Coat – 10 எண்ணிக்கை
4. கட்டிங் பிளேயர் – 10 எண்ணிக்கை
5. திருப்ளி – 1 செட்
6. L.key (சாவி) – 1 செட்

<u>அலுவலககுறிப்பு–</u>

1.மன்றம் அனுமதிக்கப்படுகிறது.
2.அவசரம் அவசியம் கருதி, மின் பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் ரூ.1.00 (ஒரு இலட்சம்) செலவினம் மேற்கொண்டது மன்றம் அனுமதிக்கப்படுகிறது.

(ந.க.எண்.099/2019/இ1)

043. வந்தவாசி நகராட்சி பகுதியில் பொது மக்கள் அறியும் வகையில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நடத்திட 27.10.2018 அன்று டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நடத்திய வகையில் மைக்செட், மண்டபம் வாடகை மற்றும் டீ,பிஸ்கெட் கொடுத்த வகையில் பட்டியல் தொகை ரூ.6,600/–ஐ திரு.சிவக்குமார், இளநிலை உதவியாளர் என்பவருக்கு வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

<u>அலுவலககுறிப்பு–</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.டெங்கு விழிப்புணர்வு நடத்திட மைக்செட், மண்டபம் வாடகை, டீ, பிஸ்கெட் கொடுத்த வகையில் தொகை ரூ.6,600/– திரு.சிவக்குமார், என்பவருக்கு வழங்கியது மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.

(ந.க.எண். /2018/இ1)

044. வந்தவாசி நகராட்சி பகுதியில் 2018–2019ஆம் ஆண்டிற்கான குடிநீர் விநியோகம் பயன்பாட்டில் இருக்கும் சிறுமின்விசை பம்புகள், கைபம்புகள் மற்றும் இதர குடிநீர் ஆதாரங்களில் ஏற்படும் பழுதுகளை நீக்கி சீரான குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக அவசர பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அவசர அவசியம் காரணமாக தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 –பிரிவு 15ன் கீழ் பணி செய்தமைக்கு ரூ.1,44,517/– வழங்கியதற்கும் மன்றம் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு—

1.மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.271 /2019/இ1, நாள்.19.03.19)

045. மாவட்ட ஆட்சியர், திருவண்ணாமலை அவர்களின் உத்திரவிற்கிணங்க (ந.க.பி.சி3/1375/2019, நாள்.13.03.19) உள்ளாட்சி தேர்தல்கள்—2019க்காக வந்தவாசி நகராட்சி பகுதியில் அமைந்துள்ள புதிய வார்டுகளில் உள்ள வாக்கு சாவடி மையங்களில் Plan, தயாரிக்கவும், Townmap—ல் அனைத்து வாக்கு சாவடி மையங்கள் மற்றும் Zone Root காண்பிக்க Auto Card மூலம் Plan தயாரிக்கவும், வேண்டியுள்ளது. தேர்தல் அவசரப்பணியாதலால் அவசரம் மற்றும் அவசியம் கருதி உடனே Plan களை தயாரித்து சமர்பிக்க. மன்றத்தில் முன் அனுமதி வேண்டப்படுகின்றது. உத்தேச செலவினம் ரூ.20,000/—(இருபதாயிரம் ) ஆகும்.

அலுவலக குறிப்பு—

1.தேர்தல் அவசரப்பணியாதலால் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.386 /2019/நஅஆ, நாள்.18.03.19)

046.வந்தவாசி நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்திவரும் குப்பை வண்டி வாகனம் எண்.TN25/AW/3043 வாகனத்திற்கு FC காலம் 27.04.2019 உடன் முடிவடைவதால் அதற்கான தோராய செலவினம் ரூ.2.00 (இரண்டு இலட்சத்திற்கு) மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

1.மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

(ந.க.எண்.417/2019/எச்1, நாள்.03.04.19)

046 A . வந்தவாசி நகராட்சியில் பொது சுகாதாரத்திற்கு பயன்படுத்திவரும் வாகனங்களுக்கு FC செய்ய கட்டணங்கள் மற்றும் ஆண்டு வாகனவரி செலுத்தியது கீழ்காணும் விவரப்படி வழங்கப்பட்டது.

1.TN25/T/6143 குப்பை அகற்றும் லாரி , FC செய்ய கூலி கட்டணம் செலுத்தியது – 3310/—

2.TN25/AW 3043 டிப்பர் லாரி ஆண்டு வாகன கூலி – 3900/—

மேற்கண்ட விவரப்படி செலவிடப்பட்ட தொகைகள் சம்மந்தப்பட்டவர்களுக்கு வழங்கியது மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

1.மன்றம் அனுமதிக்கப்படுகிறது.

2.அவசர அவசியம் கருதி செலவினம் மேற்கொண்டது.
திரு.M.கோபிநாத், ரூ. 3900/—, திரு.S.ராமமூர்த்தி, ரூ.3310/—
வழங்கியது மன்றம் ஒப்புதல் அளித்தல்.

(ந.க.எண்.523/2019/எச்1, நாள்.24.04.19)

047.வந்தவாசி நகராட்சி ஆணையாளர் அவர்களின் அறையில் உள்ள குளிர் சாதனப்பெட்டி பழுது அடைந்துள்ளதால் நிர்வாக நலன் கருதி அவசர அவசரம் கருதி சீர் செய்தமைக்கு உண்டான தொகை ரூ.5,986/—ஐ திரு.குமார் என்பவருக்கு வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

1.ஒப்புதல் அளித்தல்.

2.அவசரம் அவசியம் கருதி உடன் பழுது பார்த்தவகையில் தொகை ரூ.5,986/—ஐ
திரு.குமார் என்பவருக்கு வழங்கியது மன்றம் அனுமதி அளித்தல்.

ந.க.எண்.0186/2019/எச்1, நாள்.14.04.19)

**048.**வந்தவாசி நகராட்சி அலுவலகத்தில் பயன்படுத்தி வரும் வாகனம் TN25/Z **8969** மற்றும் TN25/AT **4738** பழுது அடைந்துள்ளதை நிர்வாகம் நலன் கருதி அவசரம் அவசியம் கருதி உடன் பழுது பார்த்தவகையில் செலவினங்கள் திரு.M.கிருஷ்ணமூர்த்தி ஓட்டுநர் மற்றும் திரு.S.சீனுவாசன் ஆகிய இருவரும் மேற்கொண்ட செலவின தொகை வழங்கியதற்கு மன்றம் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u>

1.மன்றம் ஒப்புதல் அளித்தல்.
2.அவசரம் அவசியம் கருதி பழுது பார்க்கப்பட்டதற்கு செலவினம் 490 மற்றும் 1915/– மேற்கொண்டது மன்றம் அனுமதி அளித்தல்.

ந.க.எண். /2019/எச்1, நாள்.16.04.19)

**049.**வந்தவாசி நகராட்சி எல்லைப்பகுதிகள், வார்டுகள், (புதியது, பழையது), சாலைகள், தெருக்கள், பொறியியல்பிரிவு மற்றும் பொது சுகாதார பிரிவில் உள்ள முக்கிய அம்சங்கள், ஆகியவைகளை உள்ளடக்கிய புவி சார்ந்த நகர வரைபடம் அறைகளுடன் கூடியது, இதுவரை நகராட்சியில் இல்லாததால் புதிதாக ஒன்றை தயாரிக்க வேண்டியது மிக அவசியம். (GIS-Based Town Map) அனைத்து நகராட்சி பணிகளுக்கும் மிக அவசியம். ஆகவே இந்த வரைபடத்தை வேலூர் ரீஜனில் மற்ற நகராட்சிகள் தயாரித்து வருவதால் வந்தவாசி நகராட்சியும் இந்த GIS Based Towm Map தயாரிக்க மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகின்றது. உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சம் ஆகும்.

<u>அலுவலக குறிப்பு–</u>

GIS-Based Town Map) அனைத்து நகராட்சி பணிகளுக்கும் பயன்பாடு மிக்கது. எனவே மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 751 /2019/நஅஆ, நாள்.17.05.19

**050.** வந்தவாசி நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 69 எண்ணிக்கை பணியாளர்களை கொண்டு தனியார் மூலமாக துப்புரவு பணி மேற்கொள்வதற்கு நகரமன்றம் தனது தீர்மானம் எண்.123, நாள்.24.10.2018 தேதிய தீர்மானத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதின் பேரில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.K.Dis.No.32976/J3/2018, நாள்.04.01.2019–ம் தேதிய கடிதத்தில் மாவட்ட ஆட்சித்தலைவரின் அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதத்தின்படியும், ஒப்பந்த விதிகளின்படியும் நடவடிக்கை மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. undefined மேற்படி துப்புரவு பணியினை தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு ஒப்பந்த விதிகளின்படி 28.02.2019ம் தேதி அன்று மின்னணு மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. Offline–ல் கீழ்காணும் நான்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளையும் தொழில்நுட்ப தகுதி ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் மேற்படி நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளது. அதனை தொடர்ந்து இவ்விரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலை ஒப்பந்தப்புள்ளிகள் 05.03.2019 அன்று திறக்கப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| S.No. | Name of Work | SB&CO CONTRACTOR | GREENAGRO ENVIRONMENT SERVICE |
|---|---|---|---|
| 1. | Collection including Segregation & Transporation of Municipal Solid waste | | |

| | | | |
|---|---|---|---|
| | including street sweeping and drain cleaning in Ward Nos 1 to 24 of Vandavasi Municipality for one year. | 414- | 419- |

அலுவலக குறிப்பு

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள SB&CO CONTRACTOR அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண். /2019/இ1, நாள்.

051. 2019–2020 வந்தவாசி நகராட்சியில் உள்ள மூன்று நுண்ணிய உரக்கிடங்கில் பணியாற்றும் சுகாதார பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் சப்ளை செய்து கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.3.00 (மூன்று இலட்சத்திற்கு) மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் ஒப்புதல் வழங்குதல்.
2. நிர்வாக நலன் கருதி சுகாதார பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கி கொள்ளவும், அதற்கான செலவினம் ரூ.3.00 (மூன்று இலட்சத்திற்கு) மன்றம் அனுமதி வழங்குதல்.

ந.க.எண். 581 /2019/இ1, நாள்.12.04.19

052. வருகின்ற உள்ளாட்சி தேர்தலை முன்னிட்டு வாக்குச்சாவடி மையங்களுக்கு தேவைக்கும் மற்றும் வாக்குசாவடி பட்டியல்கள், வாக்காளர் பட்டியல்கள் மற்றும் தேர்தல் சம்மந்தமாக கோப்புகள், படிவங்கள் ஜெராக்ஸ் எடுக்கவும், கணினிக்கு தேவையான பொருட்கள் வாங்கி கொள்ளவும், தோராய செலவினம் ரூ.10.00 (பத்து இலட்சத்திற்கு) மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் ஒப்புதல் வழங்குதல்.
2. உள்ளாட்சி தேர்தலை முன்னிட்டு கணினி பணி இருக்கைக்கு தேவையான பொருட்கள் வாங்கி கொள்ளவும், அதற்கான செலவினம் ரூ.10.00 (பத்து இலட்சத்திற்கு) மன்றம் அனுமதி அளித்தல்.

ந.க.எண். 489 /2019/இ1, நாள்.30.05.19

053.பொது சுகாதார பிரிவிற்கு தேவையான தளவாடச் சாமான்கள் எல்லாம் தேய்ந்த நிலையில் உள்ளதாலும், மேலும் பாணி புயல் உருவாகும் நிலையில் தளவாடச்சாமான்கள் வாங்கி வழங்க நகராட்சி நிர்வாக ஆணையாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களின் அறிவுரைகள்படியும், ஆய்வு கூட்டத்தில் தெரிவித்துள்ளதின் பேரிலும், அவசரம் மற்றும் அவசியம் முன்னிட்டு தளவாடச்சாமான்கள் வாங்கி வழங்கவும், அதை அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு

நிறுவனமான வடக்குளம் மல்டிபர்ஸ் கோ அண்ட் சொசைட்டி என்ற நிறுவனத்தில் வாங்கி வழங்கவும், அதற்கான தோராய செலவினம் ரூ.10.00 (பத்து இலட்சத்திற்கு) மன்றம் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u>

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். /2019/எச்1, நாள்.24.04.19

053A. வந்தவாசி நகராட்சியில் தற்போது காஞ்சிபுரம் சாலை வடக்கு காவல் நிலையம் அருகில் உள்ள திரு.சலிமுல்லாகான் த/பெ.நவாப்கான் நெ.26, எப், காஞ்சிபுரம் சாலையில் உள்ள கட்டிடத்தில் இயங்கிவரும் நகர்ப்புற சுகாதாரமையம் மருத்துவமனைக்கு மாதவாடகை ரூ.6000/– மற்றும் மின்சார கட்டணம் ரூ.1000/–க்கு நகர்மன்றம் தனது தீர்மான எண்.76, நாள்.31.05.2013ன்படி அனுமதி வழங்கியுள்ளது. அதனடிப்படையில் தற்போது மாதவாடகை ரூ.6000/– மின்கட்டணம் ரூ.1000/– ஆக மாதம் ரூ.7000/– வழங்கப்பட்டு வருகிறது. மேலும் ஏப்ரல்–2019 முதல் மார்ச் 2020 வரை தொகை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. ஏப்ரல் .2019 முதல் மார்ச் 2020 வரை மாத வாடகை மறும் மின்கட்டணம் தொகை வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.459 /2017/இ1, நாள்.15.04.19)

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
வந்தவாசி நகராட்சி